# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

O.S.No. 2518 of 2016

Deposition of witness for

PW2

Name : Tmt. Devi @ Regina Beula

Husband's Name: Dhanaseelan

Age :

Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 01st day April of 2025 .

01.04.2025

PW2 குறுக்கு விசாரணை

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

எனக்கு தற்போது 54 வயதாகிறது. 2-ம் வாதி என் தங்கை இவ்வழக்கில் ஏற்கெனவே வா.சா.1 ஆக சாட்சியம் அளித்து விட்டார் என்றால் சரிதான். நான் 1970-1971 ம் ஆண்டில் பிறந்தேன் என்றால் எனக்கு தெரியாது. என் தங்கை 2-ம் வாதிக்கு 52 வயதாகிறது. வா.சா.ஆ.1 சொத்தை என் அம்மா வாங்கும் போது எனக்கு 10 வயது , என் தங்கைக்கு 8 வயது என்றால் சரிதான். எனக்கு திருமணம் 1984-ல் நடந்தது. என் தங்கை 2-ம் வாதிக்கு திருமணம் எந்த வருடம் நடந்தது எனக்கு தெரியாது. அவள் காதல் திருமணம் செய்து கொண்டாள். என்னுடைய திருமணத்திற்கு பிறகு தான் அவளது திருமணம் நடந்தது. என் கணவர் PWD துறையில் பணிபுரிந்தார். என் திருமணம் நடக்கும் போது என் கணவர் PWD கோர்டர்ஸில் வசித்து வந்தார் என்றால் இல்லை

அவர் வாடகை வீட்டில் வசித்து வந்தார். என் திருமணத்திற்கு பிறகு பெரம்பூர் PWD கோர்டர்ஸில் தான் நானும் என் கணவரும் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. என் அம்மா வீட்டில் தான் வசித்து வந்தோம். என் தங்கை 2-ம் வாதி திருமணத்திற்கு பிறகு கொளத்தூரில் தான் வசித்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. என் அப்பாவும் , அம்மாவும் பிரியும் போது என் வயது என்னவென்று எனக்கு தெரியாது. எனக்கு ஒரு 4 வயது இருக்கும்போது என் அப்பாவும், அம்மாவும் பிரிந்து நானும் என் தங்கையும் என் அம்மாவுடன் இருந்துவிட்டோம், 3 வது தங்கை நான்சி என் அப்பாவுடன் சென்றுவிட்டார் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என் அப்பா , அம்மா பிரிந்த பிறகு என் அப்பா அம்மாவிற்கு ரூ.1500/- ஜீவனாம்சமாக கொடுத்து வந்தார் என்று எந்த ஆவணத்தை பார்த்து சொல்கிறோம் என்றால் கோர்ட்டுக்கு போன போது தெரிய வந்தது. நான் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் திருமணத்திற்கு பிறகு நானும், என் கணவரும் அம்மா வீட்டில் தான் வசித்து வந்தோம். என் தங்கை வேலைக்கு போனார்களா என்று எனக்கு தெரியாது. என் அப்பா அம்மாவை பிரியும் போது நானும், நான்சியும் கைக்குழந்தைகள் என்றால் எனக்கு தெரியாது. என்னையும் என் தங்கையையும் என் அம்மா வீட்டுவேலை செய்து தான் காப்பாற்றினார். 1980-ல் என் அம்மா தனிப்பட்ட முறையில் அவர் தான் சொத்தை வாங்கினார் என்றாலும், அப்போது நானும் என் தங்கையும் சிறு பிள்ளைகள் என்பதால் எங்களுக்கு எந்த வருமானமும் இல்லாததால் கூட்டாக சொத்து வாங்கப்பட்டது என்று தவறாக கூறுகிறோம் என்றால் சரியல்ல. என் தாயார் வாங்கிய சொத்தில் அவர் உறவினர்களிடம் கடன் பெற்று அதில் வீடு கட்டினார் என்பதால் அந்த சொத்தில் எங்களுக்கு எவ்வித பாக உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்துஸ்தான் கார்மெண்ட்ஸ் வேலை செய்து வீடு கட்டினேன். நான் இந்துஸ்தான் கார்மெண்ட்ஸ்-ல் மிஷினில் வேலை செய்தேன். நான் இந்துஸ்தான் கார்மெண்ட்ஸ்-ல் எந்த வருடம் வேலை செய்தேன் என்று ஞாபகம் இல்லை. அது போன்று வேலை செய்யவில்லை என்றாலும், திருமணத்திற்கு

பிறகு நான் குடும்பத்தை தான் பார்த்து கொண்டு வீட்டில் இருந்தேன் என்றாலும் சரியல்ல. என் அம்மா எந்த வருடம் இறந்தார் என்று ஞாபகம் இல்லை. சுமார் 7 வருடம் இருக்கும். என் அம்மா இறப்பதற்கு முன்பு திருவேற்காடு மாரியம்மன் கோவிலுக்கு தான் அதிக பக்தியுடன் சென்று வருவார் என்றால் சரியல்ல. அவர் எல்லா கோயிலுக்கும் சென்று வருவார். என் அம்மா இறப்பதற்கு 4 வருடத்திற்கு முன்பு வரை திருவேற்காடு மாரியம்மன் கோயிலில் துணை ஆணையர் அனுமதியுடன் ஒரு அறையில் கோயிலிலேயே தங்கி வந்தார் என்றால் அவர் கோயிலில் சில நாட்களும் , வீட்டில் சில நாட்களும் ஆக இங்கு அங்குமாக போய் வருவார். 01.09.2015 என் அம்மா தாவா சொத்தை திருவேற்காடு கருமாரியம்மன் கோவிலுக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மென்ட் ஆவணம் வா.சா.ஆ.2 மூலம் எழுதி வைத்து விட்டார் என்றால் என் அம்மா மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பதால் சொத்தை எழுதி வாங்கி கொண்டார்கள். 21.05.2019 என் அம்மா திருவேற்காடு கோயிலில் உள்ள ஒரு அறையில் பாத்ரூமில் இறந்து விட்டார் என்றால் சரிதான். 21.05.2019 என் அம்மா இறந்த தேதிக்கு முன்னதாக என் அம்மாவை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் முந்தைய நாள் திருவேற்காடு கோயிலுக்கு சென்று சாப்பாடு வாங்கி கொடுத்து விட்டு வந்தேன். என் அம்மாவை பார்க்கும் போதெல்லாம் என் அம்மா என்னிடம் நன்றாக பார்த்து பேசுவார். எனக்கு ஆங்கிலம் தெரியாது. நான் கொடுத்த மருத்துவ சான்று வா.சா.ஆ.11 -ல் என் அம்மாவிற்கு Vertigo என்ற மயக்கம், தலை சுற்றல் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் அம்மா மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதற்கு மருத்துவச் சான்றிதழ் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 என் அம்மாவை நானும் என் தங்கையும் சரியாக பார்த்துக் கொள்ளாததால் என் அம்மா தாவா சொத்தை திருவேற்காடு கோயிலுக்கு எழுதும் விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கோயிலுக்கு கொடுத்திருக்கிறார் என்ற விவரம் தெரிந்து மார்ச் 2016 -ல் நானும் என் தங்கையும் தாவா சொத்தில் அத்து மீறி

பிரவேசித்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை என் அம்மா கஷடப்பட்டு, கணவர் துணையில்லாமல் சம்பாதித்து சொத்து என்றாலும், அந்த சொத்தை வாங்கும் போது நானும் என் தங்கையும் சிறுபிள்ளைகள் என்பதால் இதில் நாங்கள் கூட்டாக சம்பாதித்த சொத்து இல்லை என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கு மனநிலை நன்றாக தான் இருந்தது என்றாலும், அவருக்கு தலை சுற்றல் மட்டும் தான் இருந்தது என்றால சரியல்ல. கோயிலுக்கு சொத்தை எழுதி கொடுத்தது எனக்கும் என் தங்கைக்கும் நன்றாக தெரிந்திருந்தே பொய் வழக்கு போட வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

01.04.2025

III Addl. Sessions Judge.
III Addl. Court.